© தமிழ்நாடு அரசு
2018

பதிவெண். [illegible]

# காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

காஞ்சிபுரம், நவம்பர் 1, 2018
ஐப்பசி 15, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

[ எண் 11

பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை | .. | .. | 171–174 |
| உள்ளாட்சித் துறை அறிவிக்கை | .. | .. | 174–188 |

## மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை

I

### மாவட்ட ஆட்சியரின் தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்ட அமுலிலிருந்து நிலங்களை விலக்குதல் பற்றிய அறிவிக்கை

*(ந.க.எண். 18605/2017/ஆ1, நாள்: 07–09–2018.)*

1994ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துகளின் சட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேற்படி பஞ்சாயத்துகளின் பிரிவு 134(3)–ன் கீழ் இந்த விளம்பரம் காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து அடியில் அட்டவணையில் கண்ட நிலத்தில் அதன் எதிரில் குறிப்பிட்டுள்ள பரப்பு நிலத்தை மேற்படி பஞ்சாயத்துகளின் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது என அறிவிக்கிறார். இந்த பரப்பளவு சற்று குறைவாகவோ சரியானதாகவோ அல்லது கூடுதலாகவோ இருக்கலாம்.

*அட்டவணை*

*காஞ்சிபுரம் மாவட்டம்,*
*திருப்போரூர் வட்டம்,*
*நெ.17, கேளம்பாக்கம் கிராமம்*

| புல எண் | வகைப்பாடு | மொத்த விஸ்தீரணம் (ஹெக்டேரில்) | விலக்கப்பட்ட விஸ்தீரணம் (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| 11/1 | மேய்க்கால் | 0.95.0 | 0.18 |
| 14 | குளம் | 4.64.5 | 0.355 |
| 56/3 | தரிசு | 0.04.0 | 0.04 |
| 57/1 | தரிசு | 0.04.0 | 0.04 |
| 59 | வண்டிப்பாதை | 0.31.0 | 0.12.5 |

காஞ்சிபுரம்,
2018 [illegible]

அ. பொன்னையா
மாவட்ட ஆட்சித் தலைவர்

தாம்பரம் நகராட்சியில் கீழ்க்கண்டவாறு 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படும்.

1. மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி தாம்பரம் நகராட்சியில் 01.04.2018ம் தேதி முதல் குடியிருப்பு கட்டடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்யப்படும்.

2. தாம்பரம் நகராட்சியில் 1260 தெருக்கள் / சாலைகள் A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை மதிப்பின்படி (Zonal Value ) 01.04.2018 முதல் சொத்து வரி உயர்வு செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

3. அ) மண்டலம் A யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ. 3.00லிருந்து ரூ.4.50 ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது நடைமுறைப்படுத்தப்படும்.

ஆ) மண்டலம் B யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ.1.90 லிருந்து ரூ.2.90 ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது நடைமுறைப்படுத்தப்படும்.

இ) மண்டலம் C யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ.1.15 லிருந்து ரூ.1.70 ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது நடைமுறைப்படுத்தப்படும்.

4) தொழிற்சாலைகளுக்கு குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து இரண்டு மடங்கு ஆகும். வணிகப்பயன்பாட்டிற்கு குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து மூன்று மடங்கு ஆகும்.

5) தாம்பரம் நகராட்சியில் சொத்து வரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது சொத்து வரி திருத்தியமைக்கும் அனைத்து வகையானக் கட்டிடங்களுக்கும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2894 நாள். 12.10.2018 ல் வகைப்படுத்தப்பட்டுள்ளபடி, மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக்கொள்ளப்பட்டு சொத்து வரி விதிப்பு செய்யப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தாம்பரம் நகராட்சி,
2018 அக்டோபர் 26.

ஒம்/———.
*ஆணையாளர்,*
*தாம்பரம் நகராட்சி.*

## பல்லவபுரம் நகராட்சி

**பல்லவபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு 01.04.2018 ம் தேதி முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண்.5050/2018/அ1 நாள்.15.10.2018 )*

அரசாணை எண் 73. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் பல்லவபுரம் நகராட்சி சொத்து வரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர் நாள்.20.08.2018ல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 73 மற்றும் 76ன் படி சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டிய விபரங்களின் பட்டியல்.

| வ.எண் | கட்டடப்பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்) | 50% சதவீதத்திற்கு மிகாமல் |
| 2 | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டடங்கள் | 100% சதவீதத்திற்கு மிகாமல் |

பல்லவபுரம் நகராட்சி பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும் அதன் அடிப்படையில் சொத்து வரி பொது சீராய்வு செய்யவும் மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் அரசு கடிதங்களில் தெரிவித்துள்ளவாறு பல்லவபுரம் நகராட்சி பகுதியிலுள்ள 2298 தெருக்கள் A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

A, B, மற்றும் C என வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரம்

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | A Zone | 87 |
| 2 | B Zone | 995 |
| 3 | C Zone | 1216 |
| | மொத்தம் | 2298 |

இந்நகர் மன்ற தீர்மான எண்.217 நாள்.05.09.2018ன்படி கீழ்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) 01.4.2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு விவரங்கள் பல்லவபுரம் நகராட்சி இணையதள முகவரி ( http://123.63.242.116/pallavapuram) மற்றும் பல்லவபுரம் நகராட்சி விளம்பரப் பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்விவரங்களை நேரடியாக மேற்படி இணையதளத்தின் வாயிலாகவும், நகராட்சி அலுவலக விளம்பர பலகையின் வாயிலாகவும், பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது.

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| A | ரூ.2.60 | ரூ.3.90 |
| B | ரூ.1.95 | ரூ.2.95 |
| C | ரூ.1.30 | ரூ.1.95 |
| D | ரூ.1.00 | A, B, மற்றும் C மண்டலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. |

மேலும் பல்லவபுரம் நகராட்சியில் உள்ள 2298 தெருக்கள் / சாலைகள் A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி , அம்மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை 10.09.2018ம் தேதிய மாலை மலர் நாளிதழில் வெளியிட்டும், நகராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரபடுத்தியும் , நகராட்சி இணையதளத்தில் வெளியிட்டும் பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் ஆணையருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் தெரிவிக்க அறிவிக்கப்பட்டது. அறிவிப்பு வெளியிடப்பட்டு 09.10.2018ம் தேதியுடன் 30 தினங்களும் முடிவடைந்த நிலையில் மூன்று ஆட்சேபனை மனுக்கள் வரப்பெற்றுள்ளது. பொது மக்களின் அத்தியாவசிய அடிப்படை வசதிகளை செய்திட தேவையான நகராட்சியின் நிதிநிலையினை மேம்படுத்திட மேற்படி மூன்று ஆட்சேபனை மனுக்களை நிராகரித்து பல்லவபுரம் நகராட்சியில் உள்ள 2298 தெருக்கள் / சாலைகள் A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் மேற்காணும் விபரப்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அடிப்படை மதிப்பு இறுதி செய்யப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண். 279 நாள். 15.10.2018 ல் ஒப்புதல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்லவபுரம் நகராட்சியில் கீழ்க்கண்ட வாறு 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி பொது சீராயவு மேற்கொள்ளப்படும்.

1. மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி பல்லவபுரம் நகராட்சியில் 01.04.2018ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% சதவீதத்திற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்யப்படும்.

2. பல்லவபுரம் நகராட்சியில் 2298 தெருக்கள் / சாலைகள் A, B, மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை மதிப்பின்படி (Zonal Value) 01.04.2018 முதல் சொத்து வரி உயர்வு செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

3. அ) மண்டலம் A யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ. 2.60லிருந்து ரூ.3.90 ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது நடைமுறைப்படுத்தப்படும்.

ஆ) மண்டலம் B யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ. 1.95 லிருந்து ரூ.2.95 ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது நடைமுறைப்படுத்தப்படும்.

இ) மண்டலம் C யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ.1.30 லிருந்து ரூ.1.95 ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது நடைமுறைப்படுத்தப்படும்.

4. தொழிற்சாலைகளுக்கு குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து இரண்டு மடங்கு ஆகும். வணிகப்பயன்பாட்டிற்கு குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து மூன்று மடங்கு ஆகும்.

5. பல்லவபுரம் நகராட்சியில் இனிமேல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது வரி திருத்தியமைக்கும் அனைத்து வகையானக் கட்டிடங்களுக்கும் இந்நகர்மன்ற தீர்மானம் எண். 279 நாள். 15.10.2018 ல் வகைப்படுத்தப்படுள்ளப்படி மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு சொத்து வரி விதிப்பு செய்யப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பல்லவபுரம் நகராட்சி,
2018 அக்டோபர் 30.

ஒம்/————,
*ஆணையாளர் (பொ),*
*பல்லவபுரம் நகராட்சி.*

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்பட்டு
காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.